**4-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், உடுமலைப்பேட்டை**
**முன்னிலை : திரு.M.நம்பிராஜன்.,பி.ஏ,பி.எல்.,**
**4-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**உடுமலைப்பேட்டை**

**2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 18– ம் நாள் புதன்கிழமை**
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 4–ம் நாள்
**EA.No.3/2026**
**in E.P..No.12/2023**
**in OS.No.102/2012**

M.ரத்தினராஜ் .....மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி

//எதிர்//

1. D.தனபால்(இறப்பு)
2. துரைபாண்டியன்
3.கமலகண்ணன் ..........எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்னர் 25.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஷ்ணு ஈஸ்வரக்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/ மனுதாரர்/ வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.கணேஷ்குமார், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரீசிலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி, கடந்த 22.03.2024–ம் தேதியில் நிறைவேற்று மனு எண்.12/2023ல் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்துசெய்து வழக்கினை மேற்கொண்டு நடத்த உத்தரவிடக் கேட்டு, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 106–ன்கீழ் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவின் மனுதாரர் நிறைவேற்று மனு 12/2023 ல் எதிர்மனுதாரர் மற்றும் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். மேற்படி வழக்கு மனுதாரருக்கு எதிராக நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் மனுதாரர் எதிர்உரை தாக்கல் செய்யவதற்காக கடந்த 22.03.2024 ம் தேதியில் வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி தேதிக்கு ஒருவாரத்திற்கு முன்பாக மனுதாரருக்கு தொடர் காய்ச்சல் ஏற்பட்டு உடல் நிலை பாதிக்கப்பட்டு அவ்வப்போது மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று வந்தார். மேற்படி மனுதாரருக்கு உடல்நிலை குன்றியதால் கடந்த 1 மாத காலகட்டத்தில் மனுதாரர் எங்கும் செல்லமுடியாத நிலையிலும், யாரையும் சந்திக்க முடியாத நிலையில் இருந்து வந்தார். நீதிமன்றத்தில் கடந்த 22.03.2024 ம் தேதி மனுதாரரால் ஆஜராக இயலவில்லை. மேற்படி வழக்கில் மனுதாரர் ஆஜராகாததால் மனுதாரருக்கு எதிராக நீதிமன்றம் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் மேற்படி நிறைவேற்று மனுவில் சொல்லப்பட்ட அசல் வழக்கு எண்: 102/2012 என்ற வழக்கில் மனுதாரருக்கு எதிராக 17.02.2021 ம் தேதியில் வழங்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டி அசல் வழக்கை நடத்தி வந்தார். அதன் பின்னர் மனுதாரருக்கு மீண்டும் அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போய் வந்ததால், மேற்படி அசல் வழக்கையும், நிறைவேற்று மனுவையும் தொடர்ந்து நடந்த இயலவில்லை. தற்போது நிறைவேற்று மனு வழக்கில் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தை மேற்படி சொத்தை ஜப்தி நடவடிக்கையை மனுதாரர்கள் எடுக்க இருக்கிறார்கள் என்ற விவரம் மனுதாரருக்கு சற்றே உடல்நிலை தேறி வழக்கறிஞரை சந்தித்து தற்போதுதான் தெரிந்து கொண்டார். மனுதாரர் ஆஜராகாத நிலை மனுதாரரின் அஜாக்கிரதையாலோ அல்லது வேண்டுமென்றோ ஏற்பட்டதல்ல. மனுதாரரையும் மீறி எதிர்பாராத உடல்நிலை பாதிக்கப்பட்ட சூழ்நிலையால் ஏற்பட்டதாகும். எனவே மனுதாரர் மேற்படி நிறைவேற்று மனுவில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக் கேட்டு மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் உரையின் சுருக்கம்:</u>**

மனுதாரர் Order XXI Rule 106 CPC–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனு பொய்யானதும், சட்டபூர்வ ஆதாரமற்றதும், நீதிமன்ற நடைமுறையை தாமதப் படுத்தும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டதுமானது ஆகும். இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது ஆகும். E.P.No. 12/2023 கடந்த 22–03–2024 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் / தீர்ப்புக் கடனாளர் முறையாக நோட்டீஸ் பெற்றிருந்தும், வேண்டுமென்றே ஆஜராகவில்லை. அதனால் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. மனுதாரர் தற்போது "நோய்மை" காரணம் கூறுகிறார். அந்த நோயை நிரூபிக்கும் அரசாங்க மருத்துவர் வழங்கிய சான்றிதழ் அல்லது உரிய மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. வெறும் காரணம் கூறுவது Order XXI Rule 106 CPC (Sufficient cause) கருதப்பட முடியாது. Order XXI Rule 106 CPC படி, உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மட்டுமே இத்தகைய மனு தாக்கல் செய்யப்பட வேண்டும். இவ்வழக்கில் உத்தரவு 22–03–2024 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போதைய மனு 29–01–2026 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது கடுமையான மற்றும் விளக்கமற்ற காலதாமதமாகும். மேலும் காலதாமதத்தை மன்னிக்க தனி மனு தாக்கல் செய்யப்படவில்லை. எனவே அடிப்படையிலேயே நிராகரிக்கப்பட வேண்டியது ஆகும். மனுதாரர் இதற்கு முன்பு தாக்கல் செய்த I.A.No.1, 1.A.No.2 மற்றும் 1.A.No.3 மனுக்களிலும் ஆஜராகாமல் Exparte ஆனது நீதிமன்ற பதிவுகளில் உள்ளது. இதன்மூலம் மனுதாரர் நீதிமன்ற நடவடிக்கைகளை திட்டமிட்டு அலட்சியம் செய்து வருவது தெளிவாகிறது. இந்நிலையில் "ஒருமுறை தவறு' என்று கூற முடியாது. O.S.No.102/2012 வழக்கு 2012–ம் ஆண்டு தொடங்கப்பட்டது. கடந்த 14 ஆண்டுகளாக தீர்ப்பளிப்பவர் தமது சட்டபூர்வ உரிமையைப் பெற முயற்சி செய்து வருகிறார். தீர்ப்பாணை கிடைத்த பின்னரும், நிறைவேற்று மனு வழியாக அமல்படுத்த முயன்றபோதும், மனுதாரர் தொடர்ந்து தாமத உத்திகளைப் பயன்படுத்தி வருகிறார். நீதிமன்ற உத்தரவின் பலனை தீர்ப்பளிப்பவர் அனுபவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதைக் காண்பதேயாகும்.**

<u>5. மனுதாரர் தரப்பு வாதம்</u>

மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், மனுதாரருக்கு எதிராக நிறைவேற்று மனு எதிர்மனுதாரரால் தாக்கல்செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல்செய்வதற்காக கடந்த 22-03-2024 ம் தேதியில் வாய்தா போடப்பட்டிருந்தது என்றும் மேற்படி தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பாகவே மனுதாரருக்கு காய்ச்சல் ஏற்பட்டு உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்ததால் மேற்படி வாய்தா தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், மனுதாரர் ஆஜரின்மையால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரியவில்லை என்றும், தற்போது சிகிச்சைக்கு பின்னிட்டுதான் மேற்படி ஒருதலைபட்ச உத்தரவு பற்றி தெரிய வந்தது என்றும், மேற்படி ஆஜரின்மை வேண்டுமென்றோ, அஜாக்கிரதையாலோ ஏற்படவில்லை என்றும், மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்றும், எனவே மனு அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

<u>6. எதிர்மனுதாரர் தரப்பு வாதம்</u>

எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், மேற்படி நிறைவேற்று மனு வழக்கில் கடந்த 22-03-2024 ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் அறிவிப்பு பெற்றிருந்தும் வேண்டுமென்றே ஆஜராகவில்லை என்றும், மனுதாரர் உடல்நிலை பாதிக்கப்பட்டதாக கூறுவது பொய் என்றும், சிகிச்சை பெற்றுக்கொண்டதற்கான உரிய ஆவணம் எதுவும் தாக்கல்செய்யாமல் காரணம் மட்டும் கூறுவது ஏற்புடையதல்ல என்றும், மேலும் மேற்படி நிறைவேற்று மனுவில் 22-03-2024 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் மனு தாக்கல்செய்ய வேண்டும், ஆனால் 29-01-2026 அன்று மனுதாக்கல்செய்யப்பட்டுள்ளது, மேலும் காலதாமதத்தை மன்னிக்க மனு எதுவும் தாக்கல்செய்யப்படவில்லை என்றும், மனுதாரருக்கு மேற்படி மனுவில் உத்தரவு பெறப்பட்டும் மனுதாரரால் உத்தரவின் பலனை அனுபவிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**<u>7. தீர்வு:–</u>**

7.1) நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும் ஆவணங்களையும் நன்கு பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக நிறைவேற்று மனு தாக்கல்செய்து மேற்படி மனுவில் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பெற்றுள்ளார் என்பது தெரியவந்துள்ளது. மனுதாரர் மேற்படி மனு விசாரணையின்போது மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் சிகிச்சை பெற்று வந்ததால் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு பற்றி தெரியவில்லை என்றும், தற்போது தான் அதுபற்றி தெரிய வந்ததாகவும் எனவே மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்றும் மேற்படி மனுவை தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.2) எதிர்மனுதாரர் தரப்பில் வேண்டுமென்றே மனுதாரர் மனுவிசாரணைக்கு ஆஜராகாமல் மனு நடவடிக்கையை காலதாமதப்படுத்தும் நோக்கத்தில்தான் இம்மனு தாக்கல்செய்துள்ளார் என்றும், ஏற்கனவே அசல் வழக்கு விசாரணையின்போதும் மனுதாரர் ஆஜராகவில்லை என்றும், தற்போதும் அவர் சிகிச்சை பெற்றதற்கான உரிய ஆவணம் எதுவும் தாக்கல்செய்யாமல் காரணம் மட்டும் கூறுவது ஏற்புடையது அல்ல என்றும், எதிர்மனுதாரரால் மேற்படி உத்தவின் பலனை அனுபவிக்க முடியாத நிலை உள்ளது என்றும் எனவே மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.2) மேற்படி வாதங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரர் உடல்நிலை சரியில்லாமல் நீதிமன்றத்தில் ஆஜராகாத சூழ்நிலை ஏற்பட்டதால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு எதிராக கடந்த 22-03-2024ம் தேதியன்று நிறைவேற்று மனு எண்.12/2023ல் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பு பிறப்பிக்கப் பட்டுள்ளது என்பது தெரியவந்துள்ளது. மேற்படி மனுதாரர் சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், மேற்படி மனு அனுமதிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு மேற்படி மனுவில் எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்பதாலும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும்

இம்மனுவை நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என்று தீர்மானித்து, எதிர்மனுதாரருக்கு, மனுதாரர் செலவு தொகையாக ரூ.5,000/-ம் 27.03.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், மேற்படி தேதிக்குள் எதிர்மனுதாரருக்கு, மனுதாரர் செலவுதொகை செலுத்தாவிடில் மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**8. இறுதியாக,**

மனு நிபந்தனையுடன் அனுமதிக்கப்படுகிறது. எதிர்மனுதாரருக்கு, மனுதாரர் செலவு தொகையாக ரூ.5,000/-ம் 27.03.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், மேற்படி தேதிக்குள் எதிர்மனுதாரருக்கு, மனுதாரர் செலவுதொகை செலுத்தாவிடில் மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M NAMBIRAJAN Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.03.18 18:09:50 +0530

4-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

**மனுதாரர்தரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்:- இல்லை**
**எதிர்மனுதாரர்கள்தரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்:- இல்லை**

M NAMBIRAJAN Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.03.18 18:10:09 +0530

4-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

FAIR/DRAFT ORDER
**EA.No.3/2026**
**in**
**EP.No.12/2023**
**in**
**O.S.No.102/2012**

Date:18.03.2026
IV$^{th}$ ADJ Udt